03.02.2026

O.S.No.62/1999

வா.சா.2.திரு.துரைச்சாமி என்ற பாண்டியராஜ், த.பெ.திரு.பாண்டியன் ஆசாரி.

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**குறுக்கு விசாரணை**

எனது தகப்பனாருக்கும் பெரியப்பாவின் வாரிசுகளுக்கும் இடையே நடைபெற்ற உழவடை சம்மந்தமாக நடந்த வழக்கு குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல எனக்கு நேரடியாக தெரியும். ஆரம்பத்தில் மேலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் உழவடையதாரராக பதிவு செய்ய சுப்பிரமணிய ஆசாரி என்பவருக்கு உத்தரவானது என்றால் உத்தரவு ஆகவில்லை. மேலூர் வட்டாட்சியர் பிறப்பித்த உத்தரவை எதிர்த்து சுப்பிரமணிய ஆசாரி மதுரை வருவாய் கோட்டாட்சியரிடம் மேல்முறையீடு தாக்கல் செய்து அந்த மனு அனுமதிக்கப்பட்டது என்றால் ஆமாம். அதனை எதிர்த்து பாண்டியன் ஆசாரி மாவட்ட ஆட்சியரிடம் சீராய்வு மனு தாக்கல் செய்து அந்த சீராய்வு மனு அனுமதிக்கப்பட்டது என்றால் ஆமாம். அந்த காலகட்டத்தில் சுப்பிரமணிய ஆசாரி என்பவர் இறந்துவிட்டப்படியால் அவரது மகன்கள் எனது தகப்பனார் மீதும் மற்ற அதிகாரிகள் மீதும் மாண்புமிகு உயர் நீதிமன்றத்தில் W.P. No.21188/2018 தாக்கல் செய்து அதில் WMP NO.19032/2018 என்ற எண்ணில் 10.10.2018ல் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் வழக்கு இருப்பதும் தெரியாது. தடை உத்தரவு உள்ளதும் தெரியாது. எனக்கு உழவடை சம்மந்தமாக எந்த விவரமும் தெரியாது என்றாலும் மாவட்ட ஆட்சியர் பிறப்பித்த வா.சா.ஆ.7 உத்தரவு

தற்போது அமலில் இல்லை என்றாலும் அந்த உத்தரவை பொறுத்துதான் மாண்புமிகு உயர் நீதிமன்றத்தில் W.P. No.21188/2018 தாக்கல் செய்து அதில் WMP NO.19032/2018 என்ற எண்ணில் 10.10.2018ல் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றாலும் அது குறித்து தெரியாது. நான் நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் வழக்கிற்காகதான் தெரிவிக்கப்பட்டவை என்றால் சரியல்ல. வாதி கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்.